NP – 092

IV Semester B.B.A./B.H.M./B.C.A./B.S.W. Examination,
August/September 2023
(NEP Scheme)
TAMIL LANGUAGE (Part – I) (Paper – IV)

Time : 2½ Hours                Max. Marks : 60

## SECTION – A

I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **(4×1=4)**

1) தேசிக விநாயகம் பிள்ளைக்கு 'கவிமணி' என்ற பட்டத்தை வழங்கியவர்

   1) திரு.வி.க.   2) உமாமகேசுவரம் பிள்ளை

   3) வ.உ. சிதம்பரனார்   4) கந்தசாமி பிள்ளை

2) 'கண்ணீர்ப் பூக்கள்' – என்ற நூலின் ஆசிரியர்

   1) வைரமுத்து   2) நா. காமராசன்

   3) கா. பாலபாரதி   4) மு. மேத்தா

3) சிறந்த திரைப்பட பாடலாசிரியருக்கான தேசிய விருதை ஐந்து முறை பெற்றவர்

   1) மு. மேத்தா   2) கண்ணதாசன்

   3) வைரமுத்து   4) பா. விஜய்

4) 'இலக்கியம் அன்றும் இன்றும்' – என்ற கட்டுரையின் ஆசிரியர்

   1) ப. ஜீவானந்தம்   2) ம.பொ. சிவஞானம்

   3) சி.சு. செல்லப்பா   4) சாமி. சிதம்பரனார்

II. எவையேனும் நான்கிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. **(4×4=16)**

1) கல்லைக் கனிசெய்வோனைத் – தோழி
   கண்களாற் கண்டிலேனே

2) எதற்காக
   அடுத்தவர் மார்க்கத்தில்
   முட்களைப் பரப்புகிறாய்

St. Claret College LIBRARY Bangalore-560013

3) கலப்படக்காரன் கையில்
தேசபக்தி கறுப்புப் பணம்

4) மணந்துகொண்டால் என்னிடமே இருக்க வேண்டும்
மரியாதை யாய்நடந்து கொள்ள வேண்டும்

5) அரசியலில் தவறு செய்த ஆட்சியாளர் தப்பித்துக்
கொள்ள முடியாது. அறமே எமனாகத் தோன்றி அவரை
அழிக்கும் என்பது ஒன்று

6) மத வெறுப்பு, மொழி வெறுப்பு, இன வெறுப்பு, சாதி
வெறுப்பு என்னும் இருளிலே அகப்பட்டுத் தடுமாறுகின்ற
வர்கள் இப்படி சொல்லத் தொடங்கி இருக்கின்றனர்

## SECTION – B

III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. **(4×6=24)**

1) வாழ்க்கையின் தத்துவங்களாக கவிமணி கூறுவன யாவை ?

2) ‘வேலைகளல்ல கேள்விகளே’ – என்னும் கவிதை புலப்படுத்தும் தன்னம்பிக்கைக் கருத்துகளை விளக்கி வரைக.

3) மனிதனின் பொய் முகத்தை ‘போதுமடா போதும்’ என்ற கவிதையின் வழி விளக்குக.

4) பூதம் குறித்துக் கேள்வியுற்ற மக்களின் நிலையைக் காட்சிப்படுத்துக.

5) மணிமேகலை காப்பியத்தின் கொள்கைகளை சாமி. சிதம்பரனார் வழிநின்று விளக்குக.

6) ‘பாரதி ஒரு புதுமைக் கவிஞன்’ என்பதைச் சான்றுடன் நிறுவுக.

## SECTION – C

IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. **(4×4=16)**

1) நேரசை, நிரையசையைச் சான்றுடன் விளக்குக.

2) தளை என்றால் என்ன ? அதன் வகைகளைக் குறிப்பிடுக.

3) ஆசிரியப்பாவின் இலக்கணத்தைக் கூறுக.

4) எடுத்துக்காட்டு உவமை அணியினைச் சான்றுடன் விளக்கி வரைக.

5) பிறிது மொழிதல் அணியினைச் சான்றுடன் விளக்குக.

6) தற்குறிப்பேற்ற அணியினை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

---